| | |
|---|---|
| Publication: | THE HINDU |
| Date: | December 2, 2017 |

# Private firms to maintain Kodaikanal lake, road

## With this arrangement, the municipality would save around ₹10 lakh in a year

**STAFF REPORTER**
KODAIKANAL

Collector T.G. Vinay on Friday said that maintenance of the Kodaikanal lake and the seven-km long road around it would be handed over to private firms.

He told reporters that private firms would protect the lake and nearby areas from pollution and ensure clean environment. With this arrangement, the Kodaikanal Municipality would save around ₹10 lakh in a year. As the government had cancelled the ₹80-crore project to desilt the lake, the district administration would soon send fresh proposals to desilt the lake.

Trees that were uprooted at several places due to heavy downpour would be removed and uprooted electric poles would be erected again as early as possible.

Clearing operations had begun. Eviction drive on Kodaikanal ghat road suffered delay due to torrential rain. He advised tourists and cab operators to drive vehicles carefully on the ghat road.

Later, he inspected some affected areas on the hill station and urged officials to expedite clearing operations.



A view of the lake in Kodaikanal. • PHOTO: G. KARTHIKEYAN

| | |
|---|---|
| Publication: | தமிழால் இணைவோம்<br>தி இந்து |
| Date: | December 2, 2017 |

கொடைக்கானலில்

# ஏரிச்சாலை தூய்மை பணியில் தனியார் நிறுவனம்

■ கொடைக்கானல்

கொடைக்கானல் ஏரியை சுற்றியுள்ள பகுதியை பராமரிக்கும் பணியில் தனியார் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

கொடைக்கானலில் சுற்றுலா பயணிகள் அதிகம் பயன்படுத்தும் ஏரியை சுற்றியுள்ள பகுதியை பராமரிக்க ஸ்டெர்லிங் ஹாலிடேஸ் என்ற தனியார் நிறுவனம் முன்வந்துள்ளது. இப்பகுதியின் பராமரிப்பு பணியை அந்நிறுவனத்திடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சிக்கு ஆட்சியர் டி.ஜி.வினய் தலைமை வகித்தார்.

ஸ்டெர்லிங் ஹாலிடேஸ் நிர்வாக இயக்குநர் ரமேஷ் ராமநாதன், நகராட்சி ஆணையர் சரவணன் முன்னிலை வகித்தனர்.

ஏரிச்சாலையில் நாள் முழுவதும் குப்பைகளை அகற்ற தூய்மைக்குழு அமைத்து பராமரிப்பு செய்ய ஸ்டெர்லிங் ஹாலிடேஸ் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

இச்சாலையில் தூய்மை பணியை தொடங்கிவைத்து ஆட்சியர் டி.ஜி. வினய் பேசுகையில்,

கொடைக்கானல் ஏரியை சுற்றியுள்ள பகுதிகளில் குப்பைகள் சேகரமாகாமல் தவிர்க்க சுற்றுலா பயணிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார்.

முன்னதாக, அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

கொடைக்கானல் ஏரியை தூர் வாரும் ரூ.80 கோடி மதிப்பிலான திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இதுகுறித்து ஆய்வு நடத்தி புதிய திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கொடைக்கானல் - வத்தலகுண்டு சாலையில் ஆக்கிரமிப்புக்களை அகற்றும் பணி மழையால் தாமதமாகிறது. தொடர் மழை பாதிப்புகள் 2 நாட்களில் சரிசெய்யப்படும் என்றார்.



▲ கொடைக்கானல் ஏரிச்சாலை தூய்மைப் பணியை தொடங்கிவைத்தார் மாவட்ட ஆட்சியர் டி.ஜி.வினய்.

| | |
|---|---|
| Publication: | THE NEW INDIAN EXPRESS |
| Date: | December 2, 2017 |

NATURE'S FURY

# Collector visits Kodai, inspects rescue operations

EXPRESS NEWS SERVICE
@ Dindigul

DINDIGUL District Collector T G Vinay, who visited Kodaikanal and other areas on Friday to inspect rescue operations, gave instructions to the officials to be alert and attend to emergencies.

Kodaikanal hill station has been experiencing strong gales and heavy rain. More than 100 trees were uprooted in many places. The fallen trees were removed by the officials of the highways department.

Vinay told *Express* that the highways department officials have been instructed to be alert and cautious since many tourists are coming to Kodaikanal even during the evening hours.

Vinay reiterated that both tourists and the local people should inform concerned officials if they found any damaged road or fallen trees in the hill station. The Collector also mentioned that steps would be taken to enhance facilities for tourists visiting Kodaikanal. The number of visitors usually peaks in summer.

**NGO to take care of lake maintainence**

The Kodaikanal Lake and the surrounding areas will be maintained with the cooperation of the municipality and an NGO. The district administration has asked tourists to help keep the picnic spots clean

A government press note stated that Kodaikanal hill station attracts visitors from all over the globe and that a large number of tourists come regularly. Visitors also often littered the place, which, in turn, affected the environment.

The municipal authority collects the garbage with the cooperation of some NGOs and segregates it later, said the note. However, many tourists throw wastes into the lake and on the roads around the lake while shopping here, especially around the Park area. This should be prevented. Concerned officials should create awareness among the local people and the tourists, the press note said.

| | |
|---|---|
| Publication: | தினத்தந்தி DAILY THANTHI |
| Date: | December 2, 2017 |

**Headline: Lake cleaning work**

கொடைக்கானல்

# ஏரிச்சாலையை தூய்மைப்படுத்தும் பணி

## கலெக்டர் தகவல்

கொடைக்கானல், டிச.2–

கொடைக்கானல் நகரில் உள்ள நட்சத்திர ஏரி சுமார் 4½ கிலோ மீட்டர் சுற்றளவு கொண்டது. இந்த ஏரிச்சாலையை தூய்மைப்படுத்தும் பணி தனியார் பங்களிப்புடன் நேற்று தொடங்கியது. இதற்கான விழா ஏரிச்சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் நடைபெற்றது. இதில் கலெக்டர் டி.ஜி.வினய் கலந்து கொண்டு பணியினை தொடங்கி வைத்து பேசினார். நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் சரவணன், சுகாதார ஆய்வாளர் சுப்பையா உள்பட பலர் கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து கலெக்டர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–

கொடைக்கானல் ஏரியினை சுற்றியுள்ள சாலைகள் இன்று (சனிக்கிழமை) முதல் தனியார் பங்களிப்புடன் தூய்மைப்படுத்தப்பட உள்ளன. இதனால் நகராட்சிக்கு ஆண்டுதோறும் 10 லட்சம் ரூபாய் வரை செலவு குறையும். ஏரியினை தூய்மைப்படுத்த 80 கோடி ரூபாயில் அறிவிக்கப்பட்ட திட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏரியினை தூய்மைப்படுத்த புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மழையால் விழுந்த மரங்கள் மற்றும் மின் கம்பங்களை அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இந்த பணிகள் 2 நாட்களில் நிறைவு பெறும். கொடைக்கானல்–வத்தலக்குண்டு சாலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி கனமழை காரணமாக தாமதம் ஆகியுள்ளது. மழை நின்றவுடன் இந்த பணிகள் நடைபெறும். கொடைக்கானல் மலைப்பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருவதால் சுற்றுலா பயணிகள் மிகுந்த கவனத்துடன் பயணம் மேற்கொள்ள வேண்டும். மேற்கண்டவாறு அவர் கூறினார்.

| | |
|---|---|
| Publication: | தின பூமி |
| Date: | December 2, 2017 |

Headline: Sterling Holidays maintain Kodaikanal lake

## நகராட்சியுடன் இணைந்து கொடைக்கானல் ஏரி பகுதியை பராமரிக்கிறது ஸ்டெர்லிங் ஹாலிடேஸ்

கொடைக்கானல், டிச. 4-

கொடைக்கானலில் உள்ள ஏரியைச் சுற்றியுள்ள பகுதிகளை சுத்தமாக ,குப்பைகள் ஏதுமின்றி வைத்துக்கொள்ள திண்டுக்கல் மாவட்ட நகராட்சி மற்றும் கொடைக்கானல் முனிசிபாலிட்டியும் இணைந்து ஸ்டெர்லிங் ஹாலிடேசின் ஒருங்கிணைப்பில் திண்டுக்கல் ஆட்சியர் டி.ஜி.வினய், கொடைக்கானல் நகராட்சி ஆணையர் சரவணன் மற்றும் ஸ்டெர்லிங்க் ஹாலிடேசின் நிர்வாக இயக்குனர் ரமேஷ் இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் துவங்கப்பட்டது. நாள் முழுக்க சேரும் குப்பைகளை அகற்ற ஒரு தூய்மைக் குழு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொடைக்கானல் ஏரிப்பகுதியினைச் சுற்றியுள்ள இடங்களில் குப்பைகள் தேங்காமல் சாலைகள் சுற்றுப்புற இடங்கள் என அனைத்தையும் தூய்மையாக பாதுகாக்க ஒரு குழுவை ஸ்டெர்லிங் ஹாலிடேஸ் நிறுவியுள்ளது.

இந்த துவக்கம் குறித்து ஸ்டெர்லிங் ஹாலிடேசின் நிர்வாக இயக்குனர் ரமேஷ் இராமநாதன் கூறுகையில்,

"கொடைக்கானலுக்கும், எங்களுக்குமான தொடர்பு மிக நீண்டது. அது தான் ஏரியை நாங்கள் பாதுகாக்கும்படி செய்தது. இந்த ஏரியைச் சுற்றியுள்ள பகுதிகளை சுத்தம் செய்ய இந்த மாவட்ட நிர்வாகமும் முனிசிபால் அதிகாரியும் எங்களோடு இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சி. இது அங்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளிசடமும் நல்ல வரவேற்பை ஏற்படுத்தும், என்றார்.

| | |
|---|---|
| Publication: | தினமணி |
| Date: | December 2, 2017 |

**Headline: Private firms to maintain Kodaikanal lake**

# கொடைக்கானல் ஏரி பராமரிப்பு தனியாரிடம் ஒப்படைப்பு

**கொடைக்கானல், டிச. 1:** கொடைக்கானல் ஏரி பராமரிப்பை தனியாரிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கொடைக்கானல் கீழ் பூமிப் பகுதியிலுள்ள தனியார் ரிசார்ட் வளாகத்தில் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் வினய் தலைமை வகித்தார். அப்போது ஏரிகரையோரம், ஏரிச்சாலை ஆகியவற்றை பராமரிக்கும் பொறுப்பை தனியார் வசம் ஒப்படைத்து ஏரிச்சாலையை தூய்மை செய்யும் பணியை தொடங்கி வைத்தார். இந் நிகழ்ச்சியில் கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர் சரவணன், கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் மோகன், நகராட்சி சுகாதார ஆய்வாளர் சுப்பையா மற்றும் தனியார் ரிசார்ட் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் வினய் கூறியதாவது:

கொடைக்கானல் ஏரி மற்றும் ஏரிச்சாலைகள் பராமரிப்பு பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு ஆண்டுக்கு ரூ.10-லட்சம் வருவாய் கிடைக்கும். தமிழக அரசால் ஏரியை தூர்வாருவதற்கு ரூ.80 கோடி நிதி ஒதுக்கப்பட்ட திட்டம் தற்போது கைவிடப்பட்டு புதிய திட்டம் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையால் பல இடங்களில் விழுந்துள்ள மரங்கள்,மின்கம்பங்கள் ஆகியவை இரண்டு நாள்களில் சரி செய்யப்படும். மலைச்சாலைகளில் வரும் சுற்றுலாப் பயணிகள் கவனமாக பயணித்து வரவேண்டும் என்றார்.



கொடைக்கானல் ஏரி பராமரிப்பை தனியாருக்கு ஒப்படைக்கும் நிகழ்ச்சியில் ஏரிச்சாலையை சுத்தம் செய்யும் பணியை மாவட்ட ஆட்சியர் வினய் தொடங்கி வைத்தார். உடன் நகராட்சி ஆணையாளர் சரவணன்.

| Publication: | தின சங்கு நாளிதழ் |
|---|---|
| Date: | December 2, 2017 |

**Headline: Sterling Holidays helps to maintain Kodaikanal lake and its nearby places**

# கொடைக்கானல் ஏரியைச் சுற்றியுள்ள இடங்களை பராமரிக்க ஸ்டெர்லிங்க் ஹாலிடேஸ் ஆதரவளிக்கிறது




கொடைக்கானல், டிச.02-

கொடைக்கானலில் உள்ள ஏரியைச் சுற்றியுள்ள பகுதிகளை சுத்தமாக ,குப்பைகள் ஏதுமின்றி வைத்துக்கொள்ள திண்டுக்கல் மாவட்ட நகராட்சி மற்றும் கொடைக்கானல் முனிசிபாலிட்டியும் இணைந்து ஸ்டெர்லிங் ஹாலிடேசின் ஒருங்கிணைப்பில் திண்டுக்கல் ஆட்சியர் டி.ஜி.வினய், கொடைக்கானல் நகராட்சி ஆணையர் சரவணன் மற்றும் ஸ்டெர்லிங்க் ஹாலிடேசின் நிர்வாக இயக்குனர் ரமேஷ் இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் துவங்கப்பட்டது.

நாள் முழுக்க சேரும் குப்பைகளை அகற்ற ஒரு தூய்மைக் குழு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொடைக்கானல் ஏரிப்பகுதியினைச் சுற்றியுள்ள இடங்களில் குப்பைகள் தேங்காமல் சாலைகள் சுற்றுப்புற இடங்கள் என அனைத்தையும் தூய்மையாக பாதுகாக்க ஒரு குழுவை ஸ்டெர்லிங் ஹாலிடேஸ் நிறுவியுள்ளது.

இந்த துவக்கம் குறித்து ஸ்டெர்லிங் ஹாலிடேசின் நிர்வாக இயக்குனர் ரமேஷ் இராமநாதன் கூறுகையில், "கொடைக்கானலுக்கும், எங்களுக்குமான தொடர்பு மிக நீண்டது. அது தான் ஏரியை நாங்கள் பாதுகாக்கும்படி செய்தது. இந்த ஏரியைச் சுற்றியுள்ள பகுதிகளை சுத்தம் செய்ய இந்த மாவட்ட நிர்வாகமும் முனிசிபால் அதிகாரியும் எங்களோடு இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சி. இது அங்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளிசடமும் நல்ல வரவேற்பை ஏற்படுத்தும், என்றார்.

சுத்தப்படுத்தும் பணியை தொடங்கி வைத்து, கலெக்டர் வினய் பேசுகையில், "கழிவு மேலாண்மை குறித்த முன்னேற்றங்களுக்காக நாங்கள் அதிகம் உழைக்கிறோம். மேலும் இந்த விழிப்புணர்வு முயற்சிக்காக ஸ்டெர்லிங் ஹாலிடேஸ் பாராட்டப்பட வேண்டியதாகும். ஏரியைச் சுத்தப்படுத்தும் இந்த முயற்சி எல்லாவற்றிற்கும் முன்னோடியாக இருக்கும். கொடைக்கானல் ஏரியானது கொடைக்கானலின் முக்கிய அடையாளமாகும், என்றார்.

இந்த முயற்சி குறித்து நகராட்சி கமிஷனர் கே.சரவணன் பேசுகையில், "கொடைக்கானலின் பெருமையாக இன்றும் நிலைத்திருக்கும் ஒன்று கொடைக்கானல் ஏரி.ஆனால் அதைச்சுற்றித் தேங்கியிருக்கும் கழிவுப் பொருட்கள் இயற்கைக்குச் சாதகமில்லாததொரு சூழலை உருவாக்கியிருக்கிறது. அது தீர்க்கப்பட வேண்டிய ஒன்று. ஏரியின் சூழலைப் பாதுகாப்பது இன்றியமையாத ஒன்றாகும்.அந்த முயற்சியை முன்னெடுத்தமைக்காக ஸ்டெர்லிங் ஹாலிடேசுக்கு என்னுடைய பாராட்டுகள், என்றார்.